. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil
• பதிப்பு : நாகர்கோவில் • 16.03.2026 • மலர் 04 • இதழ்: 74
• Edition : Nagercoil • 16.03.2026 • Vol : 04 • Issue : 74 • Page : 4 • Rs. 5/-

# தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் நடைபெறும் தேதி அறிவிப்பு




தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, அசாம் மற்றும் மேற்குவங்காளம் ஆகிய 5 மாநிலங்களிலும் சட்டசபை பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது.

தமிழகத்தில் தற்போதைய 16வது சட்டசபையின் பதவிக்காலம் மே 10ந்தேதி முடிவடைகிறது. புதுச்சேரி சட்டசபையின் பதவிக்காலம் ஜூன் மாதம் 15ந்தேதியும், மேற்கு வங்காள மாநில சட்டசபையின் பதவிக்காலம் மே 7ந்தேதியும், அசாம் மாநில சட்டசபை மே 20ந்தேதியும், கேரள சட்டசபை மே 23ந்தேதியும் நிறைவு பெறுகிறது.

இந்த 5 மாநிலங்களிலும் ஏப்ரல் மற்றும் மே மாதத்தில் தேர்தலை நடத்தி முடித்திட இந்திய தேர்தல் ஆணையம் தீவிரமாக பணியாற்றி வருகிறது.

5 மாநிலங்களிலும் சட்டசபை தேர்தலை நடத்துவதற்கான அனைத்து பணிகளும் முடிந்துள்ளதால் தேர்தல் தேதி குறித்த அறிவிப்பு எந்த நேரத்திலும் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், தேர்தல் தேதி அறிவிப்பு தொடர்பாக டெல்லியில் உள்ள தலைமை தேர்தல் ஆணையத்தில் பத்திரிகையாளர் சந்திப்புக்கு இன்று அழைப்பு விடுக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, தமிழகம் உள்ளிட்ட 5 மாநில சட்டசபை தேர்தலுக்கான அறிவிப்பு தற்போது வெளியாகியுள்ளது.

டெல்லியில் இந்திய தேர்தல் தலைமைத்தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் செய்தியாளர்களை சந்தித்துவருகிறார்.

அதன்படி, தமிழகத்திற்கு வரும் ஏப்ரல் 23ம் தேதி ஒரே கட்டமாக 234 தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, மே 4ம் தேதி அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், புதுச்சேரியில் உள்ள 30 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 9ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் என்றும் வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளாவில் 140 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 9ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் எனவும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகிறது.

126 தொகுதிகள் கொண்ட அசாமில் ஒரே கட்டமாக ஏப்ரல் 9ம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவிக்கப்பட்டுள்ளது. வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவு அறிக்கப்படுகிறது.

மேற்குவங்கத்தில் உள்ள 294 தொகுதிகளுக்கும் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி, மேற்குவங்கத்தில் ஏப்ரல் 23ம் தேதி முதல் கட்ட வாக்குப்பதிவும், ஏப்ரல் 29ம் தேதி 2ம் கட்ட வாக்குப்பதிவும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவு அறிவிக்கப்படுகிறது.

## பஞ்சமி நிலத்தை மீட்டுத்தர வேண்டும்: திராவிடர் விடுதலை கட்சி மாபெரும் ஆர்ப்பாட்டம்



ஈரோடு மார்ச் 16

ஈரோடு மாவட்டம் மாயவரம் பகுதியில், தனியார் நிறுவனம் ஆக்கிரமித்துள்ளதாக கூறப்படும் பஞ்சமி நிலத்தை மீட்டுத்தர வலியுறுத்தி திராவிடர் விடுதலை கட்சியின் சார்பில் மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த போராட்டம் கிங் கருப்புசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சியின் தலைவர் அன்பு மகேஷ் சிறப்பு எழுச்சி உரையாற்றி, பஞ்சமி நிலங்களை மீட்டு உரிய மக்களுக்கு வழங்க வேண்டும் என்றும், நில ஆக்கிரமிப்புகளை அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து தீர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அசோக் கண்ணன், சக்திவேந்தன், விடுதலை சிவா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர். மேலும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தோழர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஒற்றுமையை வெளிப்படுத்தினர். பஞ்சமி நிலம் மீட்பு கோரிக்கை தொடர்பாக இந்த போராட்டம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

## தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் 198 பேருக்கு தையல் எந்திரங்கள்: அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார்



தஞ்சாவூர் மார்ச் 16

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் 198 பேருக்கு ரூபாய் 9.50 லட்சம் மதிப்பிலான தையல் இயந்திரங்களை அமைச்சர் கோவி. செழியன் வழங்கினார். தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் சமூக நலன் மற்றும் மகளி ர் உரிமை துறை சார் பில் சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக் கு விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்கும் விழா நடைபெற்றது. இதற்கு மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தலைமை தாங்கினார். முரசொலி எம்பி, துரைசந்திரசேகரன் எம் எல் ஏ , மேயர் சண். ராமநாதன், துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி ஆகியோர் முன்னி லை வகித்தனர். மாவட்ட சமூக நல அலுவலர் லதா அனைவரையும் வரவேற்றார். விழாவில் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் கலந்து கொண்டு 198 பேருக்கு ரூபாய் 9 இலட்சத்து47 ஆயிரத் து 430 மதிப்பிலான தையல் இயந்திரங் களை வழங்கிப் பேசியதாவது: தஞ்சாவூர் மாவட்டத் தில் 202526 ஆம் நிதியாண்டில் இதுவரை 145 பேருக்கு ரூபாய் 6 லட்சத்து 93 ஆயிரத் து 825 மதிப்பில்லான தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு இருந்தன. தற்போது திருவிடைமருதூர் தொகுதியில் 37 பேருக்கும், கும்பகோ ணம் தொகுதியில் 26 பேருக்கும், பாபநாச ம் தொகுதியில் 34 பேருக்கும், திருவை யாறு தொகுதியில் 28 பேருக்கும், தஞ்சா வூர் தொகுதியில் 26 பேருக்கும், ஒரத்தநா டு தொகுதியில் 10 பேருக்கும், பட்டுக்கோட்டை தொகுதி யில் 16 பேருக்கும், பேராவூரணி தொகு தியில் 23 பேருக்கும், என மொத்தம் 198 பேருக்கு ரூபாய் 9, இலட்சத்து47 ஆயிரத் து 430 மதிப்பிலான தையல் எந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன இவ்வாறு அவர் பேசி னார். இதில் மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) தவச்செல்வன் மற்று ம் பலர் கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படை வாகனங்களை ஆட்சியர் கொடி அசைத்து துவக்கி வைத்தார்




தேனி: மார்ச் 15

தேனி மாவட்டத்தில் தேர்தல் நன்னடத்தை விதிமுறை மீறல்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்க ஆண்டிபட்டி, பெரியகுளம், போடிநாயக்கனூர், கம்பம் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கும் பறக்கும் படை வாகனங்கள் இயக்கப்பட்டன. ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் தலா 12 வாகனங்கள் என்ற அடிப்படையில் மொத்தம் 48 தேர்தல் பறக்கும் படை வாகனங்கள் தொகுதிவாரியாக புறப்பட்டன. தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்டத் தேர்தல் அதிகாரியும் மாவட்ட ஆட்சியருமான ரஞ்சித் சிங் பறக்கும் படை வாகனங்களை கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

## விளாத்திகுளம் அருகே இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் ரூ.20.62 கோடியில் 300 புதிய வீடுகள் மார்கண்டேயன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்



தமிழகத்தில் வசித்து வரும் இலங்கைத் தமிழரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தமிழக அரசு பல்வேறு மறுவாழ்வு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பாதுகாப்பான குடியிருப்பு, தரமான கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவ வசதி மற்றும் நிதி உதவி உள்ளிட்ட பல்வேறு ஆதரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பின்படி தமிழ்நாடு முழுவதும் இலங்கைத் தமிழர் முகாம்களில் வசித்து வரும் மக்களுக்கு மேம்பட்ட வசதிகள் ஏற்படுத்தும் வகையில் பழுதடைந்த வீடுகள் புதுப்பித்தல் மற்றும் புதிய குடியிருப்புகள் அமைத்தல் போன்ற பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, தமிழகத்தில் உள்ள அகதி முகாம்களில் 10,000க்கும் மேற்பட்ட பழைய மற்றும் சேதமடைந்த வீடுகள் சீரமைக்கும் பணிகளும், தேவையான இடங்களில் புதிய வீடுகள் கட்டும் திட்டங்களும் அரசு மூலம் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாப்பாத்தி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் ரூ.20 கோடி 62 லட்சம் மதிப்பீட்டில் 300 புதிய குடியிருப்பு வீடுகள் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்த வீடுகள் கட்டும் பணிக்கான பூமி பூஜை மற்றும் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இதில் சட்டமன்ற சட்ட விதிகளை ஆய்வு குழு தலைவர் மார்கண்டேயன் எம்.எல்.ஏ.கலந்து கொண்டு பூமி பூஜை செய்து கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்த திட்டத்தின் மூலம் முகாமில் வசித்து வரும் இலங்கைத்தமிழர் குடும்பங்களுக்கு பாதுகாப்பான மற்றும் வசதியான குடியிருப்புகள் உருவாக்கப்பட உள்ளன. பல ஆண்டுகளாக பழைய மற்றும் தற்காலிக குடியிருப்புகளில் வாழ்ந்து வந்த குடும்பங்களுக்கு இந்த புதிய வீடுகள் பெரும் நன்மை அளிக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், புதிய வீடுகளுடன் குடிநீர் வசதி, கழிவுநீர் வடிகால் அமைப்பு, மின்சாரம், சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது.

இந்த நிகழ்வில் உதவி செயற்பொறியாளர் ரெஜினால்ட், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு மைய இணை இயக்குனர் முருகேஸ்வரி, புதூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ராமராஜ், புதூர் திமுக மேற்கு ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி, கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், பாண்டியன், பொறியாளர் ரவிச்சந்திரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாண்டி உள்பட அரசு அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள், இலங்கைத் தமிழர் முகாமில் வசிக்கும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## அரசு, அரசு உதவி பெறும் இல்லங் களில் உளவியல் ரீதியான பிரச்சினையை கையாளுவது குறித்து பயிற்சி




தஞ்சாவூர் மார்ச் 16.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இயங்கி வரும் அரசு, அரசுசாரா குழந்தைகள் இல்லங்களில் பணி புரியும் குழந்தைகள் நல அலுவலர் மற்றும் ஆற்றுப்படுத்துனர்களுக்கு உளவியல் ரீதியான பிரச்சினைகள், அவர்களை எவ்வாறு கையாளும் விதம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கு மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தலைமை தாங்கினார். இதில் 100 பேர் கலந்து கொண்டனர் இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு சமூக விசாரணை அறிக்கை தயாரிப்பது குறித்தும், ஒவ் வொரு குழந்தைக ளும் குடும்ப சூழலில் வளரக்கூடிய வாய்ப்பி னை ஏற்படுத்துதல் குறித்தும் கலந்தாலோசி க்கப்பட்டது .உளவியல் நிபுணர் வைஷ்ணவி சிவகுமார் ,சட்டம் சார்ந்த நன்னடைத்த அலுவலர் புவனேஸ்வரி ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

## மருங்கூரில் கொளுத்தும் வெயிலில் அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் என்டிஏ கூட்டணி பாஜக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்




கன்னியாகுமரி மார்ச் 16

மருங்கூரில் கொளுத்தும் வெயிலில் அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் என்டிஏ கூட்டணி பாஜக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் வக்கீல் மதியழகன் தலைமை தாங்கி தொடங்கி வைத்து பேசினார். பேரூர் கழகச் செயலாளர்கள் மருங்கூர் மகேஷ், தேரூர் முத்து, இளைஞரணி நிர்வாகிகள் ரமேஷ், ஆன்றோ போஸ்கோ, நவீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கொழுத்தும் வெயிலில் சுமார் 300க்கு மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில் கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது. இதில் முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் கிளாட்சன், கவுன்சிலர் அழகைசெந்தில் மகளிர் அணி நிர்வாகிகள் ஷீலா, சோனி யா, சதா, இந்திராசுதன், நிர்வாகிகள் வெங்கடேஷ், செந்தில்குமார், மணிகண்டன், சதீஷ், மிக்கேல் ராஜன் உட்ப ட பலர் க லந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் 'தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை அடுப்பு எரிக்க கியாஸ் சிலிண்டரும் இல்லை' என ஒன்றிய பாஜக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்.



கிருஷ்ணகிரி, மார்ச். 16 ஈரான்அமெரிக்கா, இஸ்ரேல் போர் நடைபெற்று வரும் நிலையில் இந்தியாவில் தற்போது பெட்ரோல், டீசல், கியாஸ் சிலிண்டர், உள்ளிட்ட எரி பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் கியாஸ் சிலிண்டர் புக் செய்வோரின் எண்ணிக்கை வழக்கத்தை விட அதிகளவில் உள்ளது. ஏற்கனவே கியாஸ் சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு வரும் நிலையில் புக் பண்ணுவோரின் எண்ணிக்கை அதிகளவில் இருப்பதால் பெரும்பாலான கேஸ் ஏஜென்சி நிறுவனத்தினர் மூடியுள்ளனர். இந்த நிலையில் "தமிழ்நாட்டிற்கு எந்த திட்டமும் இல்லை, அடுப்பு எரிக்க கியாஸ் சிலிண்டரும் இல்லை" என்ற கோரிக்கையை வலியுறுத்தி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிசார்பில்கிருஷ்ணகிரி பேருந்து நிலையம் அருகே ஒன்றிய பாஜக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்நடைபெற்றது. நிகழ்ச்சியில் பர்கூர் சட்டமன்ற உறுப்பினரும், திமுக கிழக்கு மாவட்ட செயலாளருமான தே.மதியழகன் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் போது மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் ஒன்றிய பாஜக அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர். நிகழ்ச்சியில் தேமுதிக கிழக்கு மாவட்ட செயலாளர் கே.ஆர். சின்னராஜ், தேமுதிக கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகன், மேற்கு ஒன்றிய செயலாளர் வஜ்ர வேல், மாவட்ட பொருளாளர் லட்சுமணன், முன்னாள் மாவட்ட செயலாளர் பிரஸ் சீனிவாசன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் முருகேசன்,

காவேரி பண்ணும் ஒன்றிய செயலாளர் விஜய்வல்லரசு, மாவட்ட இளைஞரணி செயலாளர் பி.சி. கணக்கன், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் விஜயராஜ், மாவட்ட மகளிர் அணி செயலாளர் ஈஸ்வரி, ஊராட்சி செயலாளர் பச்சையப்பன், கிருஷ்ணகிரி நகர சங்கர், வேடியப்பன், பார்க் சிவா, பார்க்கோவிந்தன், திமுக நகர செயலாளர்களான அஸ்லாம் ரகுமான்ஷெரீப், வேலுமணி, ஒன்றிய செயலாளர் மகி, சிபிஐ, சிபிஎம், விடுதலைச் சிறுத்தைகள், மதிமுக, காங்கிரஸ், தமுமுக கட்சியினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# களியக்காவிளை அருகே ரூ. 2.50 லட்சம் மதிப்பிலான வாழை மரங்கள் வெட்டி சேதம்; 10 பேர் மீது வழக்கு

களியக்காவிளை அருகே உள்ள புதுப்புரைக்கல் பகுதியைச் சேர்ந்தவர் ஜெனின்லீ சத்மர் (47). இவர் தனக்கு சொந்தமான 7 சென்ட் நிலத்தில் வாழை மரங்களைநட்டுபயிரிட்டுவந்துள்ளார். சம்பவத்தன்று இவரது தோட்டத்தில் உள்ளசுவரைமுன்விரோதம்காரணமாக அதேபகுதியைசேர்ந்தமுருகன், ஜீனோ உள்ளிட்ட 10 பேர் கொண்ட கும்பல் உடைத்துள்ளனர். பின்னர் தோட்டத்தில் உள்ளே சென்று அங்கு நடப்பட்டிருந்த வாழை மரங்களையும் சேதப்படுத்தி உள்ளனர். சேதமடைந்த வாழை மரங்களின் மதிப்பு ரூ. 2.50 லட்சம் ஆகும். இதுகுறித்து ஜெனின்லீ களியக்காவிளை போலீசாரிடம் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் முருகன், ஜீனோ உள்ளிட்ட 10 பேர் கும்பல் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# மார்த்தாண்டம் அருகே மகளுக்கு தொல்லை கொடுத்ததை போலீசில் புகாரளித்த தந்தைக்கு வெட்டு; 4 பேர் மீது வழக்கு

மார்த்தாண்டம் அருகே முழங்குழி பகுதியை சேர்ந்தவர் ஜஸ்டின் (45) மர வேலை செய்யும் தொழிலாளி. இவரது மகளை முள்ளஞ்சேரி என்ற பகுதியைச்சேர்ந்தசஜின்என்பவர்தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்துள்ளார். இதனை கடந்த 8 ம் தேதி மார்த்தாண்டம் காவல் நிலையத்தில் சஜின் மீது ஜஸ்டின் புகார் அளித்துள்ளார். இந்த விரோதத்தை மனதில் வைத்த சஜின் அவரது நண்பரான அதே பகுதியை சேர்ந்த விஜில் மற்றும் கண்டால் தெரியும் 2 நபர்களுடன் ஜஸ்டின் வீட்டிற்கு சென்று ஜஸ்டினை கத்தி, கம்பி ஆகியவற்றால் தாக்கியுள்ளனர். இதில் படுகாயம் அடைந்த ஜஸ்டினை அக்கம்பக்கத்தினர் மீட்டு அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். இது குறித்த புகாரின்பேரில் மார்த்தாண்டம் போலீசார் சஜின், விஜில் மற்றும் கண்டால் அடையாளம் தெரியும் த பேர் உள்ளிட்ட 4 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி



தென்தாமரைகுளம்., மார்ச். 16

திருநெல்வேலி மாவட்டம் 228 இராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பணகுடி மனோன்மணியம் சுந்தரனார்பல்கலைக்கழகக்கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இராதாபுரம் வட்ட வழங்கல் அலுவலர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் VVPAT பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினார்கள். மேலும், 100% வாக்களிப்பு தொடர்பாக உறுதி மொழியும் எடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், கல்லூரிப் பேராசிரியர்கள், ஆசிரியர் அல்லாப் பணியாளர்கள் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்நிகழ்வினை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் இரா.திலகா ஒருங்கிணைத்திருந்தார்.

# குமரி மாவட்டத்தில் பாரதிய ஜனதா அரசை கண்டித்து திமுக கூட்டணி ஆர்ப்பாட்டம்




நாகர்கோவில், மார்ச். 16

மத்திய பாரதிய ஜனதா அரசின் தவறான வெளியுறவு கொள்கையினாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததன் விளைவாகவும் நாடு முழுவதும் சமையல் கேஸ் சிலிண்டருக்கும், வணிக ரீதியிலான கேஸ் சிலிண்டருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். இது தொடர்பாக தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஆனால் தற்போது வரை மக்களிடையே நிலவும் அச்சத்தை போக்கி நிலைமையை சீராக்கும் முறையான நடவடிக்கை எடுக்காத மத்திய அரசு மற்றும் அதிமுக கூட்டணி கட்சிகளை கண்டித்து தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின் படி கன்னியாகுமரி மாவட்டத்தில் மதசார்பற்ற கூட்டணி கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

நாகர்கோவில் தலைமை தபால் நிலையம் அருகில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு குமரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், நாகர்கோவில் மாநகராட்சி மேயருமான மகேஷ் தலைமை வகித்தார். மாநில உணவு ஆணைய தலைவர் சுரேஷ் ராஜன், மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன் உட்பட பலர் கலந்துகொண்டு பேசினார்கள். மற்றும் கூட்டணி நிர்வாகிகள் பல கலந்து கொண்டனர். இது போன்று கிள்ளியூர் தொகுதி கருங்கல் ராஜீவ் காந்தி ஜங்ஷன் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்தில் ராஜேஷ்குமார் எம்எல்ஏ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குமரி மாவட்டத்தில் மொத்தம் 60 க்கும் மேற்பட்ட இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# தென்தாமரைகுளம் தபால்நிலையம் முன்பு திமுக கூட்டணி கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்



தென்தாமரைகுளம்., மார்ச்., 16

மதசார்பற்றமுற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் தென்தாமரைகுளம்தபால் நிலையம் முன்பு தென்தாமரைகுளம் பேரூர் திமுக செயலாளர் பூவியூர் காமராஜ் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது. இதில் மாநில வர்த்தகர் அணி இணை செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர் என். தாமரை பாரதி, முன்னாள் தொண்டரணி துணை செயலாளர் வழக்கறிஞர் பாலஜனாதிபதி, ஒன்றிய பொருளாளர் எட்வின்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றியனர். ஆர்பாட்டத்தில் காங்கிரஸ், தேமுதிக உட்பட திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# குமரி மேற்கு மாவட்ட பாஜக அலுவலகத்தை முன்னாள் மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்



மார்த்தாண்டம், மார்.16

கன்னியாகுமரிமேற்கு மாவட்ட பாஜக அலுவலகத்தை முன்னாள் மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கட்சி அலுவலகத்தில் கட்சி கொடி ஏற்றி வைத்து அலுவலகத்தை திறந்து வைத்தார். மேற்கு மாவட்ட பாஜக தலைவர் ஆர் டி சுரேஷ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொது செயலாளர் சுடர் சிங், நந்தினி, மாவட்ட பொறுளாளர் உண்ணி , மாநில செயலாளர் மீனா தேவ், மாநில செயற்குழு உறுப்பினர் ஜெயசீலன், தர்மராஜ், குழித்துறை நகர தலைவர் சுமன் உட்பட திரளான பாஜக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் தொடர்ந்து குத்து விளக்கு ஏற்றி வைத்து பின் மாவட்ட தலைவர் சுரேஷ் அவர்களை மூத்த பாஜக தலைவர் பொன் ராதாகிருஷ்ணன் அலுவலக நாற்காலியில் அமர வைத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர் பொன் ராதாகிருஷ்ணன் சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெறும் என்றும் அனைவரும் சேர்ந்து உழைத்தால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆறு தொகுதியை கைப்பற்றலாம்.

பாஜக விற்கு இந்த கட்டிடம் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது சட்டமன்ற தேர்தலுக்கு பிறகு சொந்த கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். திமுக வை ஆட்சியை விட்டு இறக்க வேண்டும் என்ற இலக்குடன் பாஜக மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் தொண்டர்கள் பணியாற்ற வேண்டும் என்று பேசினார்.

இந்த நிகழ்ச்சியில்தமிழ் நாடு மகாத்மா காந்தி கட்சியை அதன் தலைவர் தங்கப்பன் பாஜக கட்சியோடு இணைத்து கொண்டார். இந்த நிகழ்ச்சியில் தாமக உட்பட பாஜக கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# குளச்சல் அருகே வீட்டில் தனியாக இருந்த பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை மீன்பிடி தொழிலாளி கைது



குளச்சல், மார்ச் .16

மணவாளக்குறிச்சி, சாத்தன்விளை பகுதியில் குடும்பத்துடன் வசித்து வருபவர் அலெக்ஸ் (44) இவர் தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்தவர். மீன்பிடி தொழிலாளியான இவருக்கு குளச்சல் பகுதியைச் சேர்ந்த மற்றொரு மீன்பிடி தொழிலாளி ஒருவரிடம் பழக்கம் உள்ளது. இருவரும் நண்பர்களாக பழகி வந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் அலெக்ஸ் குளச்சல்உள்ளதனதுநண்பன்வீட்டுக்கு சென்றுள்ளார். அப்போது வீட்டில் தனியாக நண்பரின் 11 வயதுடைய 6 ம் வகுப்பு படிக்கும் மாணவி மட்டும் இருந்துள்ளார். இதையடுத்துஅலெக்ஸ் திடீரென பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். சிறுமி அங்கிருந்து வெளியே சென்று பெற்றோரிடம்புகார் கூறியுள்ளர். பெற்றோர் குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில் மகளிர் போலீஸ் இன்ஸ்பெக்டர் தனலட்சுமி விசாரணை நடத்தி பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த அலெக்ஸ் மீது போக்சோ சட்டத்தில் வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்தனர். பின்னர் அவரை போக்சோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்

# திமுக மாவட்ட நிர்வாகியாக தேர்வு செய்யப்பட்ட ஒன்றிய சேர்மேனுக்கு ஆடிட்டர் இராஜீவ்காந்தி சால்வை அணிவித்து வாழ்த்து



திருவெண்ணெய் நல்லூர். மார்ச்.16

விழுப்புரம் திமுக தெற்கு மாவட்டம்திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் அருகே ஏனாதிமங்கலம் கிராமத்தை சேர்ந்தவர் ஓம்சிவசக்திவேல். இவர் திருவெண்ணெய்நல்லூர் ஒன்றிய சேர்மேனாக இருந்து வருகிறார். இவர் மாவட்ட ஆதிதிராவிடர் அணி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து திமுக தலைவர் முதலமைச்சர் ஸ்டாலின் ஆணைக்கிணங்க இந்த புதிய பொறுப்புக்கு பரிந்துரை செய்த முன்னாள் அமைச்சர் பொன்முடி எம்.எல்.ஏ., விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் பொன். கௌதம சிகாமணி, திருவெண்ணெய்நல்லூர் மேற்குஒன்றியசெயலாளர் பி.வி.ஆர்.விசுவநாதன் ஆகியோருக்கு ஓம்சிவசக்திவேல் நன்றி தெரிவித்துள்ளார். இதையடுத்து திருவெண்ணெய்நல்லூர் திமுக கிழக்கு ஒன்றிய வர்த்தகர் அணி அமைப்பாளர் ஆடிட்டர் இராஜீவ்காந்தி நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். மேலும் திமுக நிர்வாகிகள் பலர் இவருக்கு நேரிலும், தொலைபேசி மூலமாகவும், சமூக வலைதளங்களிலும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# களியக்காவிளை சுற்றுவட்டார பகுதிகளில் அறிவிக்கப்படாத மின் தடை; பொதுமக்கள் அவதி

களியக்காவிளை, மார்ச், 16

களியக்காவிளை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் அறிவிக்கப்படாத மின் தடையால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசு மின்சார வாரியத்தின் துணை மின் நிலையம் குமரி மாவட்டம் மருதங்கோடு பகுதியில் செயல்பட்டு வருகிறது.

இந்த துணை மின்சார நிலையத்தில் இருந்து களியக்காவிளை, மீனச்சல் படந்தாலுமுடு மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள வீடுகள், சிறு குறு வர்த்தக நிறுவனங்கள் உள்ளிட்டவைகளுக்கு மின் இணைப்பு கொடுத்துள்ளனர். இவ்வாறு கொடுக்கப்பட்டுள்ள மின் இணப்புகளில் இருந்து அடிக்கடி அறிவிக்கப்படாத மின் தடை ஏற்படுகிறது. இதனால் வர்த்தகர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொது மக்கள் பாதிகபட்டுள்ளனர். மேலும் மிகவும் பழுதுபட்டுள்ள மின் கம்பிகள் தாழ்வாக உள்ளது.

இதனை மாற்றி அமைத்து புதிய மின் கம்பிகள் அமைப்பது காலத்தின் கட்டாயம் ஆகும். மின்சார வாரிய அரசு அதிகாரிகளின் அலட்சிய போக்கால் பொதுமக்கள் பாதிப்படைந்து வருகின்றனர். இதனை தவிர்க்கவும், அடிக்கடி ஏற்படும் மின்தடை ஏற்படாமல் இருக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் ஒத்தி வைக்கப்பட்டு ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு



கிருஷ்ணகிரி மாவட்டத்தில், காலை நடைபெற்ற தேர்வில் 104 நபர்கள் தேர்வு எழுதினர். 10 நபர்கள் அப்சென்ட் தேர்வு எழுத வரவில்லை. பிற்பகல் நடைபெற்ற தேர்வில் 100 நபர்கள் தேர்வு எழுதினர் 17 நபர்கள் தேர்வு எழுத வரவில்லைகிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் ஒத்தி வைக்கப்பட்டு, நடத்திய ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு II தொகுதி II / I A சேவைகள் பதவிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் , நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் ஒத்திவைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு II தொகுதி II /II A சேவைகள் பதவிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இத்தேர்விற்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முற்பகல் தேர்விற்கு 114 தேர்வர்களும், பிற்பகல் தேர்விற்கு 117 தேர்வர்களும் தேர்வு எழுத விண்ணப்பித்திருந்தனர். இதில் முற்பகல் நடைபெற்ற தேர்வில் 104 நபர்கள் தேர்வு எழுதினார்கள். 10 நபர்கள் (ABSENT) தேர்வு எழுத வரவில்லை. பிற்பகல் நடைபெற்ற Descriptive முறை தேர்வில் 100 நபர்கள் தேர்வு எழுதினர். 17 நபர்கள் அப்சென்ட் தேர்வு எழுத வரவில்லை. இத்தேர்வு மையத்தினை கண்காணிக்க 1 முதன்மைக் கண்காணிப்பாளர், 1 நடமாடும் அலகு, 2 வீடியோகிராபர்கள், 1 ஆயுதம் ஏந்திய காவலர் நடமாடும் அலகு மற்றும் 1 தேர்வு மைய காவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். தேர்வு மையத்தில், மின்சார வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகள், போக்குவரத்து வசதி மற்றும் நடமாடும் மருத்துவக் குழுக்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர்

.ச.தினேஷ் குமார் தெரிவித்தார் இவ்வாய்வின் போது, கிருஷ்ணகிரி வட்டாட்சியர் .ரமேஷ், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் .ரமேஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.




தருமபுரியில் நடைபெற்ற ஒருங்கிணைந்த மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்திற்கு வருகை தந்து சிறப்பித்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினை தருமபுரி கிழக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு மாவட்ட தலைவர் டி. ஏ. குமார் மற்றும் நிர்வாகிகள் தமிழ்நாடு துணை முதலமைச்சரை நேரில் சந்தித்து நினைவு பரிசு வழங்கி வாழ்த்து பெற்றனர்.

# தக்கலை அருகே மதுக்கடையில் வாலிபர் மீது சரமாரி தாக்குதல்; 2 பேர் மீது வழக்கு

தக்கலை, மார்ச்.16

தக்கலை அடுத்த குமாரபுரம் பகுதியை சேர்ந்தவர் ஜோவின் (32). நேற்று முன்தினம் இரவு இவர் முட்டைக்காடு பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையில் மது வாங்கிக் கொண்டு இருந்தார். அப்போது கடை அடைக்க 15 நிமிடம் இருந்ததால் போட்டி போட்டுக் கொண்டு ஒருவருக்கொருவர் அவசரமாக மது வகைகளை வாங்கினர். ஜோவினும் மது வாங்கிக் கொண்டிருந்த போது அவருக்கு பின்னால் நின்று மர்ம நபர்கள் திடீரென ஆத்திரமடைந்து அவரை சரமாரியாக தாக்கி கீழே தள்ளினர். அந்த நபர்கள் அங்கிருந்து தப்பி சென்றனர்.

தாக்குதலில் பின் தலையில் படுகாயம் அடைந்த ஜோவின் குமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து கொற்றிக் கோடு காவல் நிலையத்தில் ஜோவின் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்து மேலும் விசாரணை நடைபெற்று வருகிறது.

# தென்காசி மாவட்டம் சுரண்டையில் மத்திய அரசை கண்டித்து இந்தியா கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி மார்ச் 16

தென்காசி மாவட்டம் சுரண்டையில் இந்தியா முழுவதும் பொது மக்கள் வீட்டிற்கு பயன்படுத்தும் சமையல் எரிவாயு விலை உயர்வு மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை கட்டுபடுத்த தவறிய மத்திய அரசை கண்டித்து இந்தியா கூட்டணி சார்பில் திமுக தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமையில், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட கூட்டணி கட்சிகளை சார்ந்த முக்கிய நிர்வாகிகள் மத்திய அரசையும் கூட்டணி கட்சி அதிமுகவையும் கண்டித்துகண்டனஉரைஆற்றினார்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் இறுதியாக தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமையில் மத்திய அரசை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டன. கண்டன ஆர்ப்பாட்டத்தில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், சுரண்டை நகர்மன்றதலைவர் வள்ளி முருகன், சுரண்டை நகர திமுக செயலாளர் கணேசன், சுரண்டை நகர காங்கிரஸ் தலைவர் ஜெயபால் மற்றும் இந்தியா கூட்டணியை சார்ந்த கட்சிகளின் முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

# கிருஷ்ணகிரியை அடுத்த குந்தாரபள்ளியில் 4ம் ஆண்டு எருது விடும் திருவிழா 300க்கும் மேற்பட்ட எருதுகள் பங்கேற்பு



கிருஷ்ணகிரி மார்ச். 16

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல் வேறு கிராமங்களில் தமிழர்களின் வீர விளையாட்டான எருது விடும் விழா நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் கிருஷ்ணகிரியை அடுத்த குந்தாரப்பள்ளியில் நான்காம் ஆண்டு மாபெரும் எருது திருவிழா நடைபெற்றது. கே.என்.நடராஜன், கே.என்.சேசாலம், டி.வெங்கட்ராஜுலு ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த எருது விடும் திருவிழாவிற்கு கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், வாணியம்பாடி, ஆம்பூர், ஆந்திர மாநிலமான குப்பம், பலமனேரி, உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து 300 க்கும் மேற்பட்ட எருதுகள் பங்கேற்றன. இதில் 120 மீட்டர் தூரத்திற்கு இருபுறமும் அரண்கள் அமைக்கப்பட்டு, அதன் நடுவே வாடி வாசலில் இருந்து ஒவ்வொரு எருதுகளாக விடப்பட்டது. குறைந்த நொடியில் அது வேகமாக சென்று இலக்கை எட்டும் எருதுகளின் உரிமையாளர்களுக்கு முதல் பரிசாக ரூ. 1.25 லட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.1 லட்சமும், மூன்றாம் பரிசாக ரூ.75 ஆயிரம் என 112 பரிசுகள் குந்தாரப்பள்ளி ஊர் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் சார்பாக வழங்கப்பட்டது. மேலும் வாடி வாசலில் இருந்து சீறிப்பாய்ந்து ஓடிய எருதுகளை இளைஞர்கள் மற்றும் காளையர்கள் தட்டி உற்சாகப்படுத்தினார்கள். இந்த எருது விடும் விழாவை காண பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமானவர்கள் வந்திருந்தனர். வெற்றி பெற்ற எருதுகளுக்கு ஊர் கவுண்டர் பால்ராஜ் முன்னிலையில் பரிசுகள் வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை குமரவேலு, ஜெனித்நடராஜன், செந்தில்குமார், வெங்கட்டமணாளன், மனோகரன், முனியப்பன், குமரேசன், ராஜகோபால், பாலகிருஷ்ணன், திருமுருகன், முருகேஷ்பாபு, முருகன், தினேஷ்குமார், கோபி, உள்ளிட்ட குந்தாரப்பள்ளி கிராம மக்கள் மற்றும் இளைஞர்கள் சிறப்பாக செய்து இருந்தனர். காவல்துறை மற்றும் கால்நடை மருத்துவத்துறையினர் பாதுகாப்பிற்கு தயார் நிலையில் இருந்தனர்.

# தேவனுடைய சபை உலக சுவிசேஷ சங்கத்தின் 1813ஆவது இரத்ததான முகாம்



கோவை மார்ச்:16

கோவை கொங்குநாடு மருத்துவமனையில் கோவை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலிருந்து 150க்கும் மேற்பட்ட தேவனுடைய சபையின் உறுப்பினர்கள் இரத்த தான முகாமினை நடத்தினார்கள்.

இந்த தேவனுடைய சபையானது நிறுவனர் அன்சாங்ஹோங் என்பவரால் 1964ல் கொரியாவில்

நிறுவப்பட்டு உலகெங்கிலும் 175+ நாடுகளில் 7500 கிளைகளைக் கொண்ட ஒரு உலகளாவிய சபையாகும். 40 லட்சத்திற்கும் அதிகமான விசுவாசிகள் வேதாகமத்தின்படி தந்தையாகிய தேவன் மற்றும் தாயாகிய தேவன் மீது நம்பிக்கை கொண்டு,

ஆரம்பகாலசபை செய்தது போலவே புதிய உடன்படிக்கையின் பஸ்கா பண்டிகையை ஆசரிக்கிறது.

இந்த சபையானது 'உன்னை நேசிப்பது போல உன் அண்டை வீட்டாரையும் நேசி' என்ற இயேசு கிறிஸ்துவின் போதனையை நடைமுறைப்படுத்த உறுப்பினர்கள் ஒன்றிணைந்துள்ளனர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இரத்ததானம் இயக்கம், தூய்மைப் பணி இயக்கம், பேரிடர் நிவாரணம், உட்பட 45,000க்கும் மேற்பட்ட சமூகப் பங்களிப்பு நடவடிக்கைகளை உலக முழுக்க செய்து வருகிறது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக வார்டு கவுன்சிலர் காயத்திரி கலந்து கொண்டார்.

மேலும் கொங்குநாடு மருத்துவமனையில் கொங்குநாடு மருத்துவமனை மேலாளார் டாக்டர் ராஜூ இரத்ததான கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் சிறப்பு விருந்தினர்களாக கோவையில் தேவனுடைய சபையின் கண்காணிராகேஷ்திருச்சியில் தேவனுடைய சபையின் கண்காணி பெஞ்சமின் கலந்துகொண்டு உறுப்பினர்களை வாழ்த்தினார். 130 உறுப்பினர்களிடமிருந்து 58500 ML ரத்தம் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# தேவதானப்பட்டியில் மத்திய அரசை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



தேவதானப்பட்டி, மார்ச் 16

தேனி மாவட்டம் தேவதானப்பட்டியில் மத்திய அரசை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர் மற்றும் தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்ச் செல்வன், சட்டமன்ற உறுப்பினரும் தெற்கு ஒன்றிய கழக செயலாளருமான சரவணகுமார் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி தேவதானப் பட்டி பேரூர் கழகத்தின் சார்பில் வைகை அணை சாலை சந்திப்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் சமையல் எரிவாயு விலை உயர்வு மற்றும் தட்டுப்பாட்டை கண்டித்தும், தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் மத்திய அரசு மற்றும் அதன் கூட்டணியை கண்டித்தும் பல்வேறு கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்திற்கு தேவதானப்பட்டி நகர் கழக செயலாளர் க. திலகர்ராஜா தலைமை தாங்கினார். முன்னாள் சேர்மன் க. குணசேகரன், தேவதானப்பட்டி சேர்மன் ராமையா முருகேஸ்வரி, பேரூர் கழக பொருளாளர் மற்றும் கவுன்சிலர் சக்தி முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் திமுக, விசிக, கம்யூனிஸ்ட், தேமுதிக, எஸ்.டி.பி.ஐ, மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பெரியகுளத்தில் மத்திய அரசை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



பெரியகுளம்: மார்ச்: 16

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர் (ம) தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்ச்செல்வன் அறிவுறுத்தலின்படி, பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் (ம) தெற்கு ஒன்றிய கழக செயலாளர் சரவணகுமார் மற்றும் பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், கழக விவசாய அணி இணைச்செயலாளர் முத்துராமலிங்கம் ஆலோசனை படி பெரியகுளம் வடகரை புதிய பேருந்து நிலைய சந்திப்பு அருகே மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் "சமையல் எரிவாயு விலை உயர்வு மற்றும் தட்டுப்பாட்டை கண்டித்தும் ", "தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் மத்திய அரசு மற்றும் அதன் கூட்டணியை கண்டித்தும்" மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மத்திய அரசுக்கு எதிராக பல்வேறு கண்டன கோஷங்கள் எழுப்பப் பட்டன. பெரியகுளம் நகர் கழக செயலாளர் முகமதுஇலியாஸ் தலைமையில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்ற இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் திமுக தேனி வடக்கு மாவட்ட கழக அவைத்தலைவர் செல்லப்பாண்டி, பெரியகுளம் நகர்மன்ற தலைவர் சுமிதா சிவக்குமார், நகர அவை தலைவர் வெங்கிடாசலம், நகர் கழக நிர்வாகிகள் வார்டு கழக செயலாளர்கள், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கார்த்தி, நகர விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஜான், நகர சுற்றுச்சூழல் அணி பழனிக்குமார், தமிழக முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் அவர்களது தம்பி ஓ.சண்முகசுந்தரம், அப்துல் சமது, மஞ்சுளா முருகன், வி.டி.எஸ்.ராஜவேலு, விசிகநிர்வாகிகள் இரா. தமிழ்வாணன், ப. நாகரத்தினம், ஜோதிமுருகன், திராவிடர் கழகம் அன்புக்கரசன், கம்யூனிஸ்ட் இராமச்சந்திரன், தேமுதிக ராஜ்குமார், எஸ். டி. பி. ஐ, மனிதநேய மக்கள் கட்சி, மக்கள் நீதிமையம், தமிழக வாழ்வுரிமை கட்சி, திமுக பாகமுகவர்கள், பிரதிநிதிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணியினர், மாணவர் அணியினர், மகளிர் அணியினர் மற்றும் மாவட்ட நகரசார்பு அணி நிர்வாகிகள், போக்குவரத்து தொமுச நிர்வாகிகள், மற்றும் உறுப்பினர்கள், தொண்டர்கள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் மாவட்ட பொதுச் செயலாளர் தங்கப் பாண்டி சீனிவாசன் அவர்களது திருமண வரவேற்பு



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் மாவட்ட பொதுச் செயலாளர் தங்கப் பாண்டி சீனிவாசன் அவர்களது திருமணவரவேற்பு நிகழ்ச்சியில் முன்னாள் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் செல்லகுமார் நேரில் சென்று மணமக்களை வாழ்த்தினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில்கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் மாவட்ட பொதுச் செயலாளர் தங்கப் பாண்டி சீனிவாசன் அவர்களது திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைப் பெற்றது.

இந்த திருமண வரவேற்பு விழாவிற்கு கிருஷ்ணகிரி முன்னாள் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்செல்லகுமார் நேரில் சென்று மணமக்கள் என்று நலமுடன் நீடுழி வாழ வேண்டும்மென வாழ்த்தினார். மேலும் இந்த திருமண வரவேற்பு விழாவில் முன்னாள் ஓசூர் காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர் மனோகரன், முன்னாள் மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் முரளிதரன், மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஹரிஸ்பாபு, பர்கூர்சட்ட மன்றதொகுதி காங்கிரஸ் பொறுப்பாளர் ஆடிட்டர் வடிவேல், மாநில பொதுச் செயலாளர் விக்னேஷ்பாபு, சேவாதள மாவட்டத் தலைவர் தேவராஜ். கிழக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத்தலைவர் விவேகானந்தன் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஏராளமானவர்கள்கலந்துக்கொண்டு மண மக்களை வாழ்த்தினார்கள்.

# கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு: தமிழகத்தை வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆர்ப்பாட்டம்



தஞ்சாவூர், மார்ச்.16

தஞ்சாவூர்யில் மத்தியமாவட்ட, மாநகர மதச்சார்பற்ற கூட்டணிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மத்திய மாவட்ட தி.மு.க செயலாளர் துரை சந்திரசேகரன் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது. மாநகர தி.மு.க செயலாளர் மேயர் சண் ராமநாதன் வரவேற்றார். முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ். பழனி மாணிக்கம், தலைமை செயற் குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, செல்வம், மாவட்ட அவைத் தலைவர் இறைவன், மாநில விவசாய அணி துணை அமைப்பாளர் ஜித்து, துணை மேயர் அஞ்சுகம் பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் தி.க. தலைவர் கி. வீரமணி கலந்து கொண்டு கண்டன உரை யாற்றினார். அவர் பேசியதாவது:

மத்திய பா.ஜ.க அரசு கடந்த 11 ஆண்டுகளில் தமிழகத்திற்கு என்று எந்த ஒரு நல்ல வளர்ச்சி திட்டங்களையும் செயல்படுத்தவில்லை. தற்போது தேர்தல் வருவதால் பிரதமர் மோடி அடிக்கடி தமிழ்நாட்டிற்கு வருகிறார். அவர் வரும்போதெல்லாம் தி.மு.க கூட்டணிக்கு ஓட்டுகள் அதிகரித்த வண்ணம் உள்ளது. தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சியில் அனைவரும் பயன் அடைந்துள்ளனர். இந்தியாவிலேயே நம்பர்ஒன் முதலமைச்சர் நமது முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தான் என்று உலக நாடுகளே புகழாரம் சூட்டுகின்றன. அந்த அளவிற்கு தமிழகத்தை வளர்ச்சி பாதைக்கு கொண்டு சென்றுள்ளார். கடந்த மாதத்தில் மகளிர் உரிமை திட்டத்தை பறிக்க சூழ்ச்சி நடைபெற்றது. அந்த சூழ்ச்சியை முதலமைச்சர் மு. க .ஸ்டாலின் முறியடித்து மகளிர்களுக்கு மூன்று மாதங்களுக்கான உரிமைத் தொகையை அவரவர் வங்கி கணக்கில் செலுத்தி விட்டார். மேலும் கோடைகால சிறப்பு தொகையும் வழங்கி னார். எதிரிகள் எவ்வளவு சூழ்ச்சிகள் செய்தாலும் அதனை முதலமைச்சர் முறியடித்து விடுவார். கடந்த 2020 ஆம் ஆண்டில் மத்திய அரசு ரயில்வே பணிகளுக்கு 7000 கோடி ஒதுக்கியது .ஆனால் தமிழகத்திற்கு ஒதுக்கியது வெறும் 1000 ரூபாய் தான். இதேபோல் மும்மொழி கொள்கையை அமல்படுத்தினால்தான் கல்வி வளர்ச்சி நிதியை ஒதுக்க முடியும் என மத்திய அரசு கூறி வருகிறது. ஆனால் தமிழகத்தில் எப்போதுமே மும்மொழிக்கு அனுமதி கிடையாது என முதலமைச்சர் திட்டவட்டமாக கூறி விட்டார். மேலும் ஆண்டுதோறும் தேசிய பேரிடர் நிதி புயல், மழையால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்கும், ஆனால் தமிழகத்தில் புயல், மழையால் பாதிக்கப்பட்ட நேரங்களில் எல்லாம் அதனை கணக்கெடுத்து அதற்கு உரிய தொகையை தமிழக அரசு கேட்கும் போது கேட்ட தொகையை வழங்காமல் சொற்ப அளவிலேயே வழங்கி தொடர்ந்து மத்திய அரசு வஞ்சித்து வருகிறது. ஆனால் இதையெல்லாம் கடந்து தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியை நாளுக்கு நாள் முன்னேற்றிக் கொண்டே செல்கிறார் நமது முதலமைச்சர். அவருக்கு நாம் அனைவரும் உறு துணையாக இருக்க வேண்டும். கண்டிப்பாக தேர்தலில் தி.மு.க கூட்டணி தான் வெற்றி பெறும். இவ்வாறு அவர் பேசினார். இதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் தமிழ் நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் மத்திய பா.ஜ.க அரசு கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன. சமையல் கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு இன்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அப்போது சிலிண்டருக்கு மாலை அணிவித்து கோஷங்கள் எழுப்பப்பட்டது.

# குழித்துறையில் தமுஎகச சார்பில் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்




மார்த்தாண்டம், மார்.16

"உலகினை அழித்திடும் யுத்தம் வேண்டாம்" என்ற கோரிக்கையுடன் தமுஎகச வின் யுத்த எதிர்ப்பு இயக்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் குழித்துறை சந்திப்பில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் அருள்மனோ யுத்த எதிர்ப்பு பாடலோடு நிகழ்ச்சியை துவங்கி வைத்தார். மாவட்ட தலைவர் கவிஞர் தக்கலை ஹலீமா தலைமை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் ஜயகாந்தன் நிகழ்வை துவக்கி வைத்து பேசினார். தமுஎகச மாநில இணைபொதுச் செயலாளர் லட்சுமிகாந்தன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஜே எம் ஹசன், அருட்பணியாளர் ஜார்ஜ், இந்திய மாணவர் சங்கம் மாவட்ட இணை செயலாளர் சுபிக்ஷா ஆகியோர் போர் எதிர்ப்பு உரை நிகழ்த்தினர். மற்றும் சுஜாமி, முரளிதரன், விஜயகுமார் சிதறால், சுந்தரேசன், அட்லின் சுபினா, சாந்தகுமார், ரெஜிமோள், இருதய ராஜ், ரோஸ் ராபின், கலிங்கராஜபுரம் ஜெயன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

யுத்த எதிர்ப்பு பாடல்களும், கவிதைகளும் இடம்பெற்ற நிகழ்வை தமுஎகச மாநில துணைபொதுச்செயலாளர் வேலாயுதம் நிறைவுசெய்து பேசினார். மாணவர் வாலிபர் சங்க நிர்வாகிள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் திரண்டு நின்று யுத்தம் எதிர்ப்பு கோஷங்கள் முழக்கினர்.

# தருமபுரி நகர ஒன்றிய திமுக மற்றும் மத சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி சார்பில் மத்திய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



தருமபுரி மார்ச் 16

தருமபுரி கிழக்கு மாவட்டம் தர்மபுரி நகரம், ஒன்றிய திமுக மற்றும் மதச்சார்பற்ற ஜனநாயகமுற்போக்குகூட்டணி சார்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் மத்திய பாஜக அரசை கண்டித்து முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம் சுப்ரமணி EX.MLA தலைமையில் பாரதிபுரத்தில் உள்ள பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சமையல் எரிவாயு விலை உயர்வை கண்டித்தும், தமிழகத்திற்கு வழங்க வேண்டிய கல்விக் கடன், மெட்ரோ ரயில் சேவை ஆகியவை வழங்காத ஒன்றிய அரசை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொருளாளர் தங்கமணி, தருமபுரி நகர செயலாளர்கள் நாட்டான் மாது, கௌதம், ஒன்றிய செயலாளர் காவேரி, நகர துணை செயலாளர் முல்லை வேந்தன், கழக பேச்சாளர் ரவி, மாவட்ட இலக்கிய அணி டி..ஏ. குமார், மாதேஸ்வரன் வெல்டிங் ராஜா, மே .அன்பழகன், தகவல் தொழில்நுட்ப அணி உதயசூரியன் மற்றும் தேமுதிக மாநில அவைத்தலைவர் இளங்கோவன், மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் பாண்டியன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மதிமுக, மக்கள் நீதி மையம் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# வெள்ளாங்கோடு அரசு தொடக்கப் பள்ளியில் ஆண்டு விழா : எஸ் பி பங்கேற்பு



மார்த்தாண்டம், மார்.16

திருவட்டாறு அருகே வெள்ளாங்கோடு அரசு தொடக்கப் பள்ளியின் ஆண்டு விழா பள்ளி தலைமை ஆசிரியை எல். மீனாம்பிகா தலைமையில் நடைபெற்றது. விழாவில் கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் டாக்டர் ஆர். ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்து மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். கல்வியாளர் முனைவர் கமல. செல்வராஜ் சிறப்புரையாற்றினார். மேலும் குமரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலக ஒருங்கிணைப்பாளர் ஓய்வு பெற்ற சி.எஸ். ராஜன் உள்ளிட்ட பலர் வாழ்த்துரை வழங்கினர். தொடர்ந்து மாணவ, மாணவியரின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா: உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்ற தமிழ்நாடு துணை முதலமைச்சர் . உதயநிதி ஸ்டாலின் அவர்களை கல்லூரி கல்வி பயின்று வரும் பதக்கங்கள் வென்ற தடகள வீராங்கனையான கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி கீழ்பேட்டையைச் சேர்ந்த செல்வி திவ்யா, மாற்றுத்திறனாளியான தனது தாயார் திருமதி சங்கீதா அவர்களுடன் சந்தித்து தங்களின் குடும்பத்திற்கு வீட்டு மனை பட்டா வேண்டி அளித்த மனுவிற்கு, உடனடி நடவடிக்கை மேற்கொண்டு தான் தங்கியிருந்த பொதுப்பணித்துறை பயணியர் மாளிகையில் வீட்டுமனை பட்டாவிற்கான ஆணையை வழங்கினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் .ஒய்.பிரகாஷ், . தே . மதியழகன் , மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

# நாகர்கோவில் பிள்ளையார்புரத்தில் காதலனுடன் சேர்ந்து தாயைக் கொல்ல முயன்ற கல்லூரி மாணவி காதலன் சிறையில் அடைப்பு





குமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே உள்ள பிள்ளையார்புரம் அன்னம் வலை கம்பெனி தெரு பகுதியை சேர்ந்தவர் சுந்தர்ராஜ். இவரது மனைவி கலாவதி (வயது 42). இவர் வீட்டில் முறுக்கு தயாரித்து விற்பனை செய்து வருகிறார். இவருக்கு இரு மகள்கள் உள்ளனர். மூத்த மகள் நர்சிங் கல்லூரி பயின்று வருகிறார்.. 2 வது மகள் சுருதி (வயது 19). நாகர்கோவிலில் உள்ள கல்லூரியில் பி.காம் முதலாம் ஆண்டு படித்து வருகிறார். இவர், அதே கல்லூரியில் தன்னுடன் பயிலும் சக மாணவரான திங்கள்சந்தை அடுத்த மேற்கு நெய்யூர் பகுதியை சேர்ந்த அபிலாஷ் (வயது19) என்பவருடன் காதலித்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் கலாவதி மகள்களின் திருமணத்துக்காக சேர்த்து வைத்திருந்த நகைகளில் 10 பவுன் நகைகள் திடீரென மாயம் ஆகி இருந்தது. இது குறித்து விசாரித்த போது சுருதி அபிலாஷ் அவசர தேவைக்காக பணம் வேண்டும் என கேட்டதால், நகைகளை கொடுத்ததாக தெரிவித்தார். நகைகளை திரும்ப கேட்டு தகராறு செய்தார். இதனால் தாய், மகளுக்கு இடையே தினமும் தகராறு நடந்து வந்தது. இந்த நிலையில் நேற்று (13ம்தேதி) அபிலாஷ், சுருதி வீட்டுக்கு வந்து கலாவதியிடம் தகராறு உருட்டு கட்டையால் கலாவதியின் பின் தலையில் தாக்கினார். இதில் கலாவதி அலறிய படி கீழே விழுந்தார். இதை பயன்படுத்திக் கொண்ட அபிலாஷ், சுருதி ஆகியோர் சேர்ந்து துப்பட்டாவால், கலாவதி கழுத்தை நெரித்து கொல்ல முயன்றனர். திடீரென சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் வந்த போது கலாவதி உயிருக்கு போராடி கொண்டிருந்தார். உடனடியாக அவரை மீட்டு ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு கலாவதிக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து சுசீந்திரம் போலீசார் விசாரணை நடத்தி கலாவதி புகாரின் பேரில் அபிலாஷ் மற்றும் சுருதி ஆகிய இருவர் மீதும் கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து கைது செய்தனர். விசாரணைக்கு பின் இருவரும் கோர்ட்டில் ஆஜர் படுத்தப்பட்டனர். அவர்களை நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார் சுருதி தக்கலை கிளை சிறையிலும், அபிலாஷ் நாகர்கோவில் சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

# கோவை சங்கர் ஐஏஎஸ் அகாடமியில் பயிற்சி பெற்ற 39 பேர் தமிழக அளவிலும், நாடு முழுவதும் 200 பேரும் தேர்ச்சி



கோவை மார்ச்:16

குடிமை பணியாளர் தேர்வுக்கான பிரபல பயிற்சி மையமான சங்கர் ஐஏஎஸ் அகாடமியின் புதிய கிளை பயிற்சி மையம் கோவை 100 அடி சாலையில் துவங்கப்பட்டது. முன்னதாக அதன் மேலான் பங்குதாரர் வைஷ்ணவி தலைமையில் நடைபெற்ற துவக்க விழாவில் பங்கேற்ற கோவை மாவட்ட நீதிபதி விவேகானந்தன் மற்றும் கடந்தாண்டு நடைபெற்ற ஐஏஎஸ் தேர்வில் தேசிய அளவில் பதினெட்டாம் இடமும் தமிழக அளவில் மூன்றாம் இடமும் பெற்று தேர்ச்சி அடைந்த சுருதி ஆகியோர் குத்துவிளக்கேற்றி பயிற்சி மையத்தை துவக்கி வைத்தனர். அப்போது பேசிய சுருதி, யுபிஎஸ்சி தேர்வு கஷ்டமாக இருக்கும் என நினைக்காமல் இலக்கை உயர்வாக நிர்ணயித்து செயலாற்ற வேண்டுமென்றார். இதைத்தொடர்ந்து பேசிய சங்கர் ஐ ஏ எஸ் அகாடமியின் மேலான் பங்குதாரர் வைஷ்ணவி, கோவை மட்டும் இன்றி சேலம், மதுரை, திருச்சி உள்ளிட்ட பகுதிகளிலும் தமிழகத்தை தவிர கேரளா, கர்நாடகா, டெல்லி உள்ளிட்ட இடங்களிலும் குடிமை பணியாளர்கள் தேர்வு பயிற்சி மையத்தை நடத்தி வருவதாகவும் இந்த ஆண்டு நடைபெற்ற யுபிஎஸ்சி தேர்வு முடிவில் தேசிய அளவில் 958 தேர்வர்கள் தேர்வு செய்யப்பட்ட நிலையில் தமிழகத்தில் இருந்து 59 முதல் 60 பேர் தேர்வு செய்யப்பட்டதாகவும் அதில் 39 பேர் தங்களது அகாடமியில் படித்தவர்கள் என்றும் இந்தியா முழுவதும் 200 பேர் சங்கர் ஐஏஎஸ் அகாடமியில் படித்தவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் தற்போது புறநகர் பகுதியில் இருந்து அதிகமானோர் பயிற்சி பெற்று வருவதாகவும் குறிப்பாக இந்த ஆண்டு தேர்வில் 17 பெண்கள் தேர்ச்சி பெற்றுள்ளது பெண்களின் முன்னேற்றமாக பார்ப்பதாகவும் மாற்றுத் திறனாளி மாணவர்களும் தற்பொழுது முன்னேற்றம் பெற்று வருவதாகவும் கூறியதுடன் இந்த ஆண்டு தங்கள் அகாடமியில் இருந்து நான்கு மாற்றுத்திறனாளிகள் தேர்ச்சி பெற்றிருப்பதாகவும் இந்த ஆண்டு தேர்வு முடிவுகள் மிக சிறப்பாக வந்துள்ளதாகவும் தெரிவித்தார். இதேபோல் சாதாரண நிலையில் இருந்தவர்களும் பெரிய முயற்சி எடுத்து நல்ல ஒரு நிலையில் தேர்ச்சி பெற்றிருப்பதாகவும் கூறினார்.

# புதுக்கடை அருகே கடன் வாங்கிய பணத்தை திருப்பி கேட்டவர் மீது தாக்குதல்; தந்தை மகன் மீது வழக்கு

புதுக்கடை, மார்ச். 16

புதுக்கடை அருகே அரசகுளம் பகுதியை சேர்ந்தவர் லாசர் (55). கொத்தனார் வேலை செய்யும் இவர் அதே பகுதியை சேர்ந்த மற்றொரு கொத்தனாரான ரெத்தின மணி (52) என்பவருக்கு 5 வருடங்களுக்கு முன்பு 1லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் கடனாக கொடுத்துள்ளார். அதன் பிறகு அந்த பணத்தை அடிக்கடி கேட்டும் பணத்தை ரெத்தினமணி திருப்பி கொடுக்கவில்லை. இதனால் இருவருக்கு தகராறு ஏற்பட்டு, முன்விரோதம் இருந்ததாக தெரிய வருகிறது.

இந்த நிலையில் சம்பவ தினம் லாசர் மீண்டும் பணம் கேட்டபோது ரெத்தின மணி கெட்ட வார்த்தைகள் பேசி கம்பால் லாசரை தாக்கியுள்ளார். மேலும் ரெத்தின மணியின் மகன் அஸ்வின் (25) என்பவரும் லாசரை தாக்கி கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

இதில் தலையில் காயமடைந்த லாசர் குழித்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இது குறித்த புகாரின் பேரில் புதுக்கடை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கார்த்திக் தலைமையிலான போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.